**தலைப்பு 250 - அரச கணக்குகள் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 250 - அரச கணக்குகள் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரச கணக்குகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 30 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 22 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரச கணக்குகள் திணைக்களத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கைகள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றது என்பது,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 02 மூலதன செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான ரூபா 1,540,956 ஆன நிதியேற்பாடு எஞ்சியிருந்ததுடன் அது ஒவ்வொரு செலவின விடயங்களினதும் தேறிய நிதியேற்பாட்டில் 29 சதவீதம் மற்றும் 87 சதவீதமாக காணப்பட்டது. | செலவினக் கட்டுப்பாடு மற்றும் சொத்துக்களை சிக்கனமாகப் பயன்படுத்துதல் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட செலவுகள் ஏற்படாமை மற்றும் இடைக்கால வரையறையினுள் அரச நிறுவனங்களுக்கு பொருந்தும் வகையில் தயாரிக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கான (Customized Accounting Standards)உரிய அங்கீகாரம் கிடைக்காததால் (அமுல்படுத்துவதற்கான கொள்கை முடிவு எடுக்கப்படாமையால்)), திட்டமிட்டபடி பணிகளை முடிப்பதற்கு முடியவில்லை. | நி.பி. 50 இன் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடுகள் முடிந்தளவு சரியாகத் தயாரிக்கப்பட வேண்டியவை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 250-1-1-0-1201 செலவு விடயத்தின் ஒதுக்கீடு எஞ்சியிருந்த நிலையில், ரூபா 90,000 ஆன ஒதுக்கீடு நி.பி. 66 இன் மூலம் பெறப்பட்டிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 வரை இந்த செலவு விடயத்தில் ரூபா 242,589 சேமிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் டோனர் வாங்குவதற்கு ரூபா 391,325 மதிப்புள்ள கட்டளை செய்யப்பட்டிருந்தாலும், சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் கையிருப்பு தீர்ந்துவிட்டதால் 2022 ஆம் ஆண்டில் ரூபா 149,825 மதிப்புள்ள டோனரை மட்டுமே திணைக்களம் பெற்றுள்ளது. எனவே, 2023 ஆம் ஆண்டில் இருப்புக்கள் பெறப்படும்போது மீதமுள்ள பெறுமதியை செலுத்தும் நோக்கத்துடன், 2022 ஆம் ஆண்டிற்காக எற்படுத்தப்பட்ட கடப்பாடுகளுக்கு தேவையான மீதமுள்ள ஒதுக்கீடு ரூபா 241,500 நி.பி. 66 இன் கீழ் ஏற்பாடுகள் மாற்றப்பட்டதன் மூலம் ஒதுக்கப்பட்டிருந்தன. | நி.பி. 50 இன் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடுகள் முடிந்தளவு சரியாகத் தயாரிக்கப்பட வேண்டியவை. |

**2.2 முற்பணம் வழங்கல் மற்றும் தீர்ப்பனவுகள்**

**2.2.1 நானாவித முற்பணக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நானாவித முற்பணக் கணக்கின் நிலுவையில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக காட்டப்பட்டுள்ள ரூபா 129,556,557 ஆன மீதியொன்று காணப்பட்டதுடன் அம் மீதியின் 88 சதவீதம் பொலனறுவை, அநுராதபுரம் மற்றும் அம்பாறை மாவட்டச் செயலகங்களிலிருந்து அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. அந்த நிலுவை முற்பணத்தை | 2022.12.31 ஆம் திகதியில் உள்ளபடியாக 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன் கொண்டு வரப்படும் மீதியாக காட்டப்பட்டுள்ள ரூபா 129,556,557 ஆன தொகை சரியானது. அம் மீதியின் 88 சதவீதம் பொலனறுவை, அநுராதபுரம் மற்றும் அம்பாறை மாவட்டச் செயலகங்களிலிருந்து அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டதுடன் அந்த மீதியை தீர்ப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை மற்றும் எடுப்பதற்கு | பின் தொடர் நடவடிக்கைகள் முறைமைப்படுத்தப் பட்டு நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு போதிய மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | உத்தேசிக்கப்பட்டுள்ள மேற்கொண்ட நடவடிக்கைகள் அறிக்கையிடப்பட்டிருந்தது. | |
| (ஆ) | அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் 2019 மார்ச் 02 ஆந் திகதி இடம்பெற்ற பணத் திருட்டு ஒன்று காரணமாக ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்வதற்காக நி.பி. 106 இன் பிரகாரம் விடுவிக்கப்பட்டிருந்த ரூபா 6,321,785 ஆன முற்பணத்தொகை 03 வருடங்களுக்கு மேலாகியும், கணக்காய்வு திகதி வரை தீர்வு செய்யப்படவில்லை. | அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பணத் திருட்டு தொடர்பாக தீர்வு செய்யப்பட வேண்டிய ரூபா 6,321,785 தொடர்பில் அநுராதபுரம் மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் வழக்கு இலக்கம் பீ 980/2019 இன் கீழ் நீதிமன்றத்திற்கு விடயம் அறிக்கையிட்டுள்ளதுடன், 2019.09.06 அன்று வழக்கு அழைக்கப்பட்டதையடுத்து, கோப்பினை தாக்கல் செய்து முடிக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்ததாகவும், திருட்டுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய நபர்கள் இதுவரை அடையாளங் காணப்படாததால் விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், 2023.04.04 ஆம் திகதிய கடிதம் மூலம் அநுராதபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு அறிவித்துள்ளார். | பின் தொடர் நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொண்டு முற்பணங்களைத் தீர்வு செய்வதற்கான போதிய எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு அளவைப் பெற்றுக் கொள்ள முடியாமை

**(அ) அரச கணக்கீட்டு முறைமையினை மேம்படுத்திய காசு அடிப்படையிலிருந்து அட்டுறு அடிப்படைக்கு மாற்றும் நடைமுறை**

2018 வரவு செலவுத்திட்ட இலக்கம் 254 இன் பிரகாரம், எதிர்வரும் 10 வருடங்களினுள் நிதிக்கூற்றுக்களை அட்டுறு அடிப்படையில் தயாரிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிக் கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கும் நடைமுறைக்காக சமர்ப்பிக்கப்பட்ட வீதி வழித்திட்டம் (Road Map) உள்ளடக்கப்பட்டுள்ள பணிகளுக்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்காக 2023 மே 20 ஆந் திகதி வரையிலும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை | திருத்தப்பட்ட வழித்திட்டத்திற்காக இதுவரையிலும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிராததுடன் அதற்காக தற்போது வரைவு அமைச்சரவைப் பத்திரம் மூலம் உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் முக்கிய செயற்பாடுகளைச் செய்வதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட முடிவுகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. |
| (ii) | 2022 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் உரிய வரவு செலவுத் திட்ட நிதியேற்பாட்டினை மேற்கொண்டு அரச கணக்குகள் திணைக்களத்தின் உப செயற்திட்டமொன்றாக இப் பணியை நடைமுறைப்படுத்தும் போது ‘‘இடைக்காலத்திற்கான கணக்கீட்டு நடைமுறையினை அறிமுகப்படுத்தி பேணிச் செல்லல்’’ உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், இலங்கை பொது துறையின் கணக்கீட்டு நியமம் (SLAPSAS) / சர்வதேச பொதுத்துறை கணக்கீட்டு நியமம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்களை உள்ளடக்கிய கணக்கீட்டுச் சட்டகத்தின் வரைபு மாத்திரம் கணக்காய்வுத் திகதியான 2023 மே 20 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருந்தது. | இடைக்காலத்திற்கான வரைபாக்கப்பட்ட கணக்கீட்டுச் சட்டகம் மற்றும் கணக்கீட்டு நியமம் கணக்கீட்டு நியமங்கள் 15 கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அதில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் இதுவரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை கிடைத்திராமையால் குறித்த கணக்கீட்டுச் சட்டகம் நியமங்கள் இதுவரையிலும் வரைபு மட்டங்களிலேயே காணப்படுகின்றது. | திணைக்களத்தின் முக்கிய செயற்பாடுகளைச் செய்வதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட முடிவுகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் (SLPSAS) 01 இன் 28 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் “நிதிக் கூற்றுக்களுக்குரிய அனைத்து நியமங்களும் அனைத்து தேவைப்பாடுகளுக்கும் இனங்குகின்றதெனின் நிதிக்கூற்றுகளின் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இனங்குகின்றதா என்பது குறிப்பிடப்படக் கூடாது.” எனக் குறிப்பிடப்பட்டுள்ளமையால் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் (SLAPSAS) காசு அடிப்படையின் இடைக்காலத்திற்காக பயன்படுத்துவற்கும் அதிலிருந்து விலகியிருப்பதை நியாயப்படுத்துவதற்கு போதிய வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ள இயலுமையொன்று இல்லாதுள்ளதாக அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் 2021 செப்டம்பர் 21 ஆந் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இடைக்காலத்திற்காக அனைத்து நியமங்களையும் பயன்படுத்தாது தெரிவு செய்த கணக்கீட்டு வழிகாட்டிகள் மாத்திரம் பயன்படுத்துவதற்கு அரச கணக்குகள் திணைக்களத்தின் முகாமைத்துவத்தினால் தீர்மானித்துள்ளதாக தொழில்நுட்ப மதியுரையாளரால் தயாரிக்கப்பட்டு 2020 ஜூலை 13 ஆந் திகதி | தற்போது உள்ள சட்டச் சட்டகத்தினுள் இடைக்காலத்திற்காக அரசதுறையின் கணக்கீட்டு நியமம் முழுமையாகப் பயன்படுத்தும் இயலுமை இல்லாதுள்ளமையினால் இலங்கை அரசத்துறை கணக்கீட்டு நியமத்தின் அடிப்படையில் இடைக்காலத்திற்காக பயன்படுத்தக் கூடிய நடைமுறைக்குச் சாத்தியமான தனியான 15 கணக்கீட்டு நியமங்கள் வரைபாக்கப்பட்டது. | திணைக்களத்தின் முக்கிய செயற்பாடுகளைச் செய்வதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட முடிவுகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்ட வழித்திட்டத்தில் (Deliverable 03) இல் குறிப்பிடப்பட்டுள்ளது. | | |
| (iv) | மேற்குறிப்பிடப்பட்டவாறு இடைக்காலத்திற்காக SLAPSAS பயன்படுத்துவதற்கும் அதிலிருந்து விலகியிருப்பதற்கும் நியாயப்படுத்துவதற்கு போதிய வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள நிதிக்கூற்றுக்களில் இயலுமை இல்லாதுள்ளதாக குறிப்பிடப்பட்ட போதிலும் இடைக்காலத்திற்காக தயாரிக்கப்பட்ட வரைபு கணக்கீட்டு நியமங்கள் அதாவது இலங்கையின் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிலிருந்து விலகியிருத்தல்கள் பல காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. இதற்கமைய SLAPSAS இதிலிருந்து விலகி இடைக்காலத்திற்காக புதிய கணக்கீட்டு நியமங்களை தயாரிக்கும் அடிப்படை தவறியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. | தற்போது உள்ள சட்டச் சட்டகத்தினுள் இடைக்காலத்திற்காக அரசதுறையின் கணக்கீட்டு நியமம் முழுமையாகப் பயன்படுத்தும் இயலுமை இல்லாதுள்ளமையினால் இலங்கை அரசத்துறை கணக்கீட்டு நியமத்தின் அடிப்படையில் இடைக்காலத்திற்காக பயன்படுத்தக் கூடிய நடைமுறைக்குச் சாத்தியமான தனியான 15 கணக்கீட்டு நியமங்கள் வரைபாக்கப்பட்டது. | திணைக்களத்தின் முக்கிய செயற்பாடுகளைச் செய்வதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட முடிவுகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. |
| (v) | அரச கணககீட்டு நடைமுறையை மேம்படுத்திய காசு அடிப்படையிலிருந்து அட்டுறு அடிப்படைக்கு மாற்றும் நடைமுறைக்காக அரச கணக்குகள் திணைக்களம் மற்றும் Ernst And Young நிறுவனம் ஆகியவற்றிற்கு இடையேயான மதியுரை சேவை உடன்படிக்கையின் 2.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட நிபந்தனைகள் (திருத்தங்கள் | பரிமாற்றல் நடைமுறைகள் தொடர்பான வரைவு அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் மதியுரை சேவை உடன்படிக்கைக்கு உரிய திருத்தங்களை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் முக்கிய செயற்பாடுகளைச் செய்வதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட முடிவுகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. |

பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்திட்ட திகதியிலிருந்து 12 மாதங்களில் இந்த உடன்படிக்கை காலாவதியான போதிலும் அதற்குரிய திருத்தங்கள் 2023 மே 20 ஆந் திகதி வரையிலும் இடம்பெற்றிருக்கவில்லை.

**(ஆ) பொது வைப்புக் கணக்குகளை பேணிச் செல்லல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2015 யூன் 24 ஆந் திகதிய 243/2015 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 6003 தொகுதியில் வைப்புக் கணக்கு பூச்சியமாக்குவதற்கு உத்தேசித்திருந்ததுடன் 2016 ஆம் ஆண்டு முதல் அப்பணிகள் வருடாந்த மதிப்பீட்டின் ஊடாக மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் இலக்கம் 6003 இன் கீழான வைப்புக் கணக்கில் ரூபா 10 மில்லியனான மீதி தீர்ப்பனவு செய்யப்படாது பல வருடங்களாக தொடர்ந்தும் முன்கொண்டு செல்லப்பட்டிருந்தது. | தொடர்பில் கொழும்பு மாவட்ட செயலகத்தினால் 2007 ஆம் ஆண்டு கணக்குப் பரிமாற்றச் சீட்டில் தவறான கணக்குப் பதிவின் காரணமாக இந்தப் வரவு மீதி ஏற்பட்டுள்ளதுடன், இந்த தவறான கணக்குகளை திருத்துவது குறித்து திறைசேரி செயல்பாட்டுத் திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டு , 2022 ஆம் வருடத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பு மாவட்ட செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 2022 திசெம்பர் 23 அன்று மீண்டும் ஒரு கூட்டம் நடாத்தப்பட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட போதிலும் அது இதுவரை நிறைவேற்றப்படாததால், அரச கணக்குகள் திணைக்களத்தினால் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி செயல்படுமாறு 2023.05.11 அன்று எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | உரிய சுற்றறிக்கை எற்பாடகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

(இ) அரச சேவைகள் பரஸ்பர பிணைப் பொறுப்புச் சங்கத்தின் செயற்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1947 செப்தெம்பர் 24 ஆந் திகதி வெளியிடப்பட்ட 9773 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் தாபிக்கப்பட்டுள்ள அரச சேவைகள் பரஸ்பர பிணைப்பொறுப்பு சங்கம் நிதிப்பிரமாணம் 880 முதல் 893 வரையிலும் பிரமாணங்களில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க பேணிச் செல்லப்படுவதுடன் 2023 மே 20 ஆந் திகதி வரையிலும் அதன் 5,044 அங்கத்தவர்களுக்காக பிணை வைப்புக்களை வழங்கியிருந்தது. 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அரச சேவைகள் பரஸ்பர பிணைப்பொறுப்பு சங்கத்தின் கணக்கின் மீதி ரூபா 594,823 ஆகும். அத்துடன், ஒவ்வொரு உத்தியோகத்தர்களினாலும் பிணை வைக்கப்பட வேண்டிய பெறுமதி 2023 மே 20 ஆந் திகதி வரையிலும் திருத்தப் பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | அரச சேவைகள் பரஸ்பர பிணைப்பொறுப்பு சங்கம் பிணை வைக்க வேண்டிய அரச உத்தியோகத்தர்களுக்காக தாபிக்கப்பட்டுள்ள நிறுவனமொன்று மாத்திரம் என்பதுடன் அங்கத்தவர்களுக்கு வைக்கப்பட வேண்டிய பிணை பெறுமதியை தீர்மானிக்கும் சட்ட அதிகாரம் சங்கத்திடம் காணப்படவில்லை. | பிணை வைக்க வேண்டிய நிறுவன மொன்றான அரச சேவைகள் பரஸ்பர பிணைப்பொறுப்பு சங்கத்தினால் நாளதுவரையாக்க படவேண்டிய சந்தர்ப்பங்கள் குறித்த அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட வேண்டியமை. |

## 4. மனிதவள முகாமைத்துவம்

### 4.1 ஆட்சேர்க்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக திணைக்களத்தில் சிரேஷ்ட மட்டத்திலான 10 பதவிகள், மூன்றாம் மட்டத்திலான 02 பதவிகள் , இரண்டாம் மட்டத்திலான 13 | நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளர் மற்றும் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது பதவியணியை திருத்தி யமைப்பதற்கு |

| | | |
|---|---|---|
| பதவிகள் மற்றும் ஆரம்ப மட்டத்திலான 02 பதவிகளுமாக 27 வெற்றிடங்கள் காணப்பட்டன. | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு இந்த திணைக்களத்தில் உள்ள வெற்றிடங்கள் குறித்து மற்றும் அந்த வெற்றிடங்களுக்கு அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டிய தேவை குறித்து குறிப்பிடப்பட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |